யாழ்ப்பாணத்தின் இன்றைய நிலை குறித்த குறிப்புகள்

அநாமதேயன்
(காலச் சுவட்டில்)

அண்மையில் யாழ்ப்பாணம் மத்தியூஸ் வீதியில் வசிக்கும் தேவராஜா சாளினி (வயது 18) சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டதாகத் தகவல் வந்தது. இப்பெண் சென்றவருடம் உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றி 2AB என்ற பெறுபேற்றைப் பெற்றிருந்தும் 'Z' முறைத் தரப்படுத்தலின் காரணமாக யாழ் பல்கலைக் கழகத்தின் கலைப்பீட உள் நுழைவுக்கான அனுமதியைப் பெற முடியாத நிலையில் மனவிரக்தியுற்றுத் தற்கொலை செய்து கொண்டதாகவே கூறப்பட்டது. ஆனால் உண்மையில் நடந்ததோ வேறு.

சம்பவம் நடைபெற்ற தினத்தில் இப்பெண் வீட்டில் தனித்திருந்துள்ளார். இவரது வீட்டிற் கருகில் இராணுவக் காவலரண் அமைந்துள்ளது. அங்கே காவற்பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் வீட்டினுள் புகுந்து சாளினியை வல்லுறவுக்குட்படுத்திக் கழுத்தை நெரித்துக் கொன்றுவிட்டுத் தூக்கில் தொங்கவிட்டுச் சென்றுள்ளனர். வெளியே சென்றிருந்த பெற்றோர் திரும்பி வந்து பார்த்தபோது தூக்கில் தொங்கிய சாளினியின் தொடைப் பகுதியிலிருந்து இரத்தம் கசிந்திருந்தது. படையினர் சாளினியை வல்லுறவுக் குட்படுத்தியமைக்கு வலுவான ஆதாரங்கள் இருந்தும் எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்க முடியவில்லை.

இது தவிர சாளினியின் மரண விசாரணை அறிக்கை கூடத் தற்கொலையால் மரணம் சம்பவித்துள்ளதாகவே வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறான மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் தற்போது யாழ்ப்பாணத்தில் பரவலாக நடைபெற்றுவருகின்றபோதிலும் வெளிக்கொணர முடியாத நிலையில் பத்திரிகையாளர்களையும் மனித உரிமை ஆர்வலர்களையும் எந்நேரமும் துப்பாக்கிகள் குறிபார்த்துக் கொண்டிருக்கின்றன.

***

யாழ்ப்பாணத்துக்கு டக்ளஸ் தேவானந்தா வருகை தந்துவிட்டால் மக்கள் பதகளிக்கத் தொடங்கிவிடுவர். அவர் கொழும்புக்குத் திரும்பிச் செல்லும்வரை ஆகக் குறைந்தது நாலைந்து பேராவது 'அடையாளம் தெரியாத நபர்களால்' சுட்டுக் கொல்லப்படுவர். அவர் யாழ்ப்பாணத்திற்கு வரும்போதே இம்முறை யார் யாரைச் சுட்டுக் கொல்வது என்ற பட்டியலுடனேயே வருவார். யாழ்ப்பாணத்திற்கு வந்து இறங்கியதுமே அப்பட்டியலைத் தமது தொண்டரடிப் பொடிகளிடம் கொடுத்து விடுவார். அவர்களும் நாளுக்கொருவராகப் போட்டுத் தள்ளிவிடுவர்.

பத்திரிகை நண்பர் ஒருவரைச் சந்திக்க ஒரு நாள் சென்றேன். அவர் பரபரப்பாக இருந்தார். காரணம் கேட்டேன். 'டக்ளஸ் யாழ்ப்பாணம் வந்திட்டானடாப்பா. இனி Front Page இல் சுட்டுக் கொலைக் கெண்டு ஒரு column ஒதுக்க வேணும்' என்றார். இனி வரவிருக்கும் நாள்களை எண்ணிப் பார்க்கும்போது பயமாக இருக்கிறது.

சுட்டுக்கொல்வது ஒருபுறமிருக்க யாழ்மக்கள் மோசமாக அவமதிப்பிற்குள்ளாகும் இன்னொரு விடயத்தையும் குறிப்பிட வேண்டியுள்ளது. சமூக சேவைகள், சமூகநலத் துறை அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து, ஸ்ரான்லி வீதியிலமைந்துள்ள ஸ்ரீதர் தியேட்டரில் தங்கியிருப்பது வழக்கம். அக்காலப் பகுதியில் கல்லூரி அதிபர் மற்றும் ஆசிரியர்கள், கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள், அரசாங்க அலுவலர்கள் ஆகியோரைத் தனது அலுவலகத்திற்கு அழைத்து மாநாடுகள் நடத்துவார். இது தவிரப் பொது மக்கள் குறைகேள் சேவையையும் நடத்துவார். இதற்கென யாழ் மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் வருகைதரும் மக்கள் மோசமான உடற் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டே அமைச்சரைச் சந்திக்க முடியும்.

உடற் சோதனை சாதாரணமானதல்ல. ஆண், பெண் இருபாலாரும் தனித்தனி மறைவிடங்களுக்குக் கொண்டுசெல்லப்பட்டு நிர்வாணமாக்கப்பட்டே இவ்வுடற் சோதனை நிகழ்த்தப்படுகிறது. இதன்போது பெண்களே மிகுந்த நெருக்கடிக்குள்ளாகின்றனர். மார்பகங்கள் உண்மையானவைதானா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளப் பல தடவை அமுக்கப்படுகின்றன. யோனித் துவாரங்களுக்குள் விரல் நுழைத்தும் பார்க்கப்படுகிறது. ஆண்களுக்கோ விதைப்பைகள் நசுக்கிப் பார்க்கப்படுகின்றன. இக் 'கௌரவிப்பு' நிகழ்வுகளை மூலைக்குமூலை பொருத்தப் பட்டிருக்கும் கமராக்கள் பதிவுசெய்கின்றன.

எனக்குத் தெரிந்தவொரு பெண் தனது பணி இடமாற்றம் தொடர்பாக டக்ளஸ் தேவானந்தாவைச் சந்திக்கப் போய்வந்தாள். அவளிடம் இவ்வுடற்சோதனை குறித்து விசாரித்தபோது சொன்னாள், 'எங்களுக்கு மார்பகப் புற்று நோய் இருக்கா? எண்டு பரிசோதிக்க ஆஸ்பத்திரிக்குப் போகத் தேவையில்லை. ஸ்ரீதர் தியேட்டருக்குப் போனால் போதும்.'

***

அண்மையில் வடமராட்சிப் பகுதியில் நடைபெற்ற துவாரகனின் 'மூச்சுக் காற்றால் நிறையும் வெளிகள்' கவிதைத் தொகுதிக்கான விமர்சனக் கருத்தரங்கில் ஓர் இலக்கியவாதி கருத்துரை வழங்கியபோது இக்கவிதை நூலுக்கான விமர்சனக் குறிப்பொன்றைக் காலச்சுவடு டிசெம்பர் 08 இதழில் ராஜமார்த்தாண்டன் எழுதியிருப்பதாகவும் அக் குறிப்பில் 'முதுகுமுறியப் பொதிசுமக்கும் ஒட்டகங்கள்', 'வெள்ளெலிகளோடு வாழுதல்' போன்ற சமகால ஈழத்தின் சூழலைப் பிரதிபலிக்கும் கவிதைகளை சூழ்நிலை பற்றிய புரிந்துணர்வின்மையால் ராஜ மார்த்தாண்டன் முக்கியத்துவப்படுத்தவில்லையெனவும் காலச்சுவடு பெப்ருவரி 09 இதழில் ஈழத்துச் சிறுகதையென்ற பேரில் வெளியாகியுள்ள தி. மயூரனின் 'கண்ணீர் தேசம்' என்ற கதையும் சமகாலச் சூழலைப் பற்றிய காலச்சுவட்டினது புரிந்துணர்வின்மையையே எடுத்துக் காட்டுவதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

இவ்விமர்சனக் கருத்தரங்கு முடிவுற்று இருதினங்களின் பின்பே பெப்ருவரி மாதக் காலச்சுவடு எனக்குக் கிடைத்தது.

(தொடர்ச்சி 30ம் பக்கத்தில்)

xprio.com
Security
Reliability
Affordability

4 CAMERA PACKAGE NORMALLY £1499.00
INTRODUCTORY OFFER £999.00

EPOS TOUCH SCREEN TIII NORMALLY £2999.00
INTRODUCTORY OFFER £1999.00
INCLUDING INSTALLATION AND TRAINING

Epos
CCTV Systems
Alarms
Broadband
Telephone
Satallite
Shop fitting
& Signs

Personal leasing option available starting from
£1.00 a day *

You can view your business from your mobile phones as well

தொடர்புகளுக்கு
020 7193 6378
07847 334231

* Subject to terms and conditions

Epos
Hospitality and Retails
Web Hosting
Web Designing
Networking
PC Maintenance/ repairs
Complete IT solutions

free Consultation & Guaranteed price matching*
Leasing available

உலகின் எப்பாகத்திலிருந்தும் உங்கள் வியாபாரத்தையோ வீட்டையோ இலகுவாக கண்காணிக்கலாம்